Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 4, Issue - 2, May 2025 E-ISSN: 2583-0481

# Dignity of the Non-Human Beings as Evidenced by Sangam

**Dr. S. Angel Jayalet Rani,** Assistant Professor of Tamil, St. Alphonsa College of Arts & Science, Karunkal, Kanyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0003-5792-9486
**DOI: 10.5281/zenodo.15804052**
**Received:** 09 December 2024; **Revised:** 19 February 2025; **Accepted:** 21 March 2025; **Available Online:** 31 May 2025.

## Abstract

*The people of the Sangam period lived in peace and harmony with nature. They composed songs based on the experience of life. It is based on the primary theme and the sub-themes. The theme is the main subject of the poem that explains the main theme and also serves as the medium for the development of the succeeding themes. Sangam Literature reflects ancient Tamil society by portraying the social conditions of their time, the customs of the Sangam people and the cultural norms of life as the poetic themes. It can be seen in all the Sangam poems. Thus, the ancient Tamils sang their life in the collections Ten Idylls (Pattupattu) and the Eight Anthologies (Ettuthogai). The study is based on the non-human life as registered in the Sangam poetry. Nevertheless, this paper investigates the non-human beings and the dignity of non-living beings as evidenced in the Sangam literature.*

**Keywords:** Sangam, Agrinai, Deer, Elephant, Tiger, Birds.

## References

[1] Ira. Achuthan. *Kurunthokai Kattum Vazhviyal*. Gaura Pathippagam, Chennai, 2022.
[2] Mahadevan, Kathir. *Dr. Nattrinai*. Koviloor Madaalayam, Koviloor, 2003.
[3] Ilampuranar. *Tholkappiyam*. Sharatha Pathippagam, Chennai, 2005.
[4] Naccinarkkiniyar. *Nedunalvaadai*. Saiva Siddhanta Noorpatippukkazhagam, Madurai, 1989.
[5] Mohan, Ira. *Pathuppaattu Moolamum Uraiyum*. New Century Book House (P) Ltd., Chennai – 600098, 2017.
[6] Puliyurkesikan. *Kurunthokai Moolamum Uraiyum*. Saran Pathippagam, Chennai, 2021.
[7] N. M. Venkatasami Nattar. *Agananooru Moolamum Uraiyum*. Kazhaga Veliyeedu, 1968.
[8] S. Jagathratsakan. *Kurunthokai*. Thirumagal Pathippagam, Chennai, 2021.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 4, இதழ் - 2, வைகாசி 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்கம் வெளிப்படுத்தும் அஃறிணை மாண்பு

**முனைவர். சு. ஏஞ்சல் ஜெயலெட் ராணி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கருங்கல், கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0003-5792-9486**
**DOI: 10.5281/zenodo.15804052**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள். இவர்கள் வாழ்க்கை அனுபவமான உரிப்பொருளை முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் ஆகியவற்றின் பின்னணியில் பாடல்கள் புனைந்துள்ளனர்.கருப்பொருள் என்பன உரிப்பொருளை விளக்குவதற்கு உரியவனாக அமைவதோடு உரிப்பொருளாகிய ஒழுக்கம் நடைபெறுவதற்குரிய களமாகவும் அமைகின்றது.இலக்கியங்கள் தம் காலச் சமுதாய நிலை, மக்களின் பழக்கவழக்கங்கள், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டு சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்றன. இவ்வகையில் பழந்தமிழர் வாழ்வியலை விரித்துப் பாடுவன பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும். இவ்விலக்கியங்களில் மனித வாழ்வியலோடு விலங்குகளின் அன்பு வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. எனவே சங்க இலக்கியங்களில் அஃறிணை உயிர்களின் மாண்பு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்:** சங்கம், அஃறிணை, மான், யானை, புலி, பறவைகள்.

## முன்னுரை

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கிய நூல்களாகும். இவ்விலக்கியங்கள் தலைவன் – தலைவியின் காதல் வாழ்வை நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்பிடுவதற்குக் கருப்பொருள்கள்இன்படுத்தப்படுகின்றன. இவ்வகையில் மான், புலி,யானை, குரங்கு, குதிரை,அணில், தும்பி, நண்டு போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாங்கினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## மான்

வேகமாகத் துள்ளி ஓடுதல் மற்றும் மருளும் குணத்துக்கு சான்றாகக் கூறப்படுவது மான் ஆகும். மான், இரலை, உழை, ஏறு, கலை, பரளை, புகரி, மரை, வருடை எனப் பல பெயர்களில் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றது. ஆண்மானின் பெயர்க்குத் தொல்காப்பியர், **“இரலையும் கலையு வாய்க்குரிய” (தொல். மரபியல், சூத். 1539)** என்று இலக்கணம் அமைத்துள்ளார்.

**இடைச்சுரநிலை**

இடைச்சுரத்தில் ஆண்மான் தன் கன்றின் பசியைத் தீர்ப்பதை,

**கவைத் தலை முதுகலை காலின் ஒற்றிப்**

**பசிப்பிணிக்கு இறைஞ்சிய பரூஉப் பெருந்ததரல் (குறுந்தொகை, 213. பாலை)**

என்று குறுந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இடைச்சுரம் மிகுந்த துன்பத்தைத் தரும் வழி. இவ்வழியில் பசியால் வாடும் கன்றின் நிலை அறிந்து ஆண்மான் தன் கிளைத்த கொம்புகளின் நுனியால் மரத்தின் அடிப்பகுதியை விரைந்து குத்தி, தன் கன்றின் பசியைத் தீர்க்க அம்மரத்தின் பருத்த, பெரிய பட்டைகளை உரித்து வளைக்கும். கன்றினை உண்ணச்செய்து எஞ்சியதைத் தானும் உண்ணும். இம்மானின் அன்புக்காட்சியினைத் தோழிக்குத் தலைவன் கூறியிருக்கலாம். வினைமேற்சென்ற தலைவன் இடைச்சுரத்தில் இக்காட்சியினைக் கண்டு திரும்புவான் என்று தலைவி நினைப்பது அவளது அன்பின் ஆழத்தைக் காட்டுகிறது. இதிலிருந்து தலைவனுக்கு வினையே அழகு என்பது தெளிவாகின்றது. இடைச்சுரத்தில் வாழும் ஆண்மானின் காதலன்பு இங்கு தலைவி, தோழி இருவராலும் பேசப்படுகிறது.

**தலைவனின் செலவினைத்தடுத்தல்**

பொருள்தேடிச் செல்ல விரும்பிய தலைவன், தன்னுடைய செலவு குறித்துத் தலைவியிடம் கூற, அவள் அதற்கு உடன்படாமலும், போகவேண்டாமென்று கூறமுடியாமலும் அழுது தன் மன உணர்வை வெளிப்படுத்தினாள். இச்செய்திக் குறிப்பில் மான் இடம் பெற்றுள்ளது என்பதை,

**மான் ஏறு உகளும் கானம் பிற்பட**

**வினை நலம் படீஇ வருதும் அவ்வரைத்**

**தாங்கல் ஒல்லுமோ, பூங்குழையோய் (குறுந்தொகை, பா. 256)**

என்று குறுந்தொகை குறிப்பிட்டுள்ளது. கரிய கொடிகளாகப் பின்னிக்கிடக்கும் அறுகின் வேர் பிணித்த அடியினின்று உண்டாகிய மெல்லிய தண்டினைத் தன்னுடைய பெண்மானோடு வயிறு நிரம்ப உண்ட ஆண்மான் கானகத்தைக் கடந்து விளையாடுகிறது. பொருள்தேடிச் செல்வதற்காகப் பிரியும் சில காலங்களைக்கூட தலைவியால் ஏற்க முடியாது என்பது தலைவனுக்குத் தெரியும்.இருப்பினும் தலைவன் தலைவியிடம் கூற, தலைவி தடுக்கும் விதத்தில் அழுது தனது கருத்தினைத் தெரிவிக்கிறாள். இதனையும் மீறி தலைவன் பொருள்தேடிச் செல்வானாயினும் இடைச்சுரத்தில் மான்கள் பிணையோடு இன்புறும் காட்சி அவன் தேரைச் செல்ல விடாது தடுப்பது உறுதியாகும்.

**கார் பருவம்**

கார்ப்பருவம் தலைவன் வராத நிலையையும், பசியில் உள்ள மான்கள் வரகின் கொழுந்துகளை உண்ணும் நிலையையும் தலைவன் பிரிவால் தலைவி வருந்திய நிலையையும் உணர்த்துகின்றது.

**பழமழைக் கலித்த புதுப்புன வரகின்**
**இரலை மேய்ந்த குறைத்தலை (குறுந்தொகை, பா. 220)**

என்ற குறுந்தொகைப்பாடல் வரிகளின் மூலம் கார்ப்பருவத்தில் மான்கள் உணவு உண்ணும் காட்சி வெளிப்படுகிறது. முதுமழையினால் புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட வரகு வளர்ந்து தழைத்து கார்ப்பருவத்தை உணர்த்துகின்றது.ஆண்மான்களுக்கு வரகின் இளைய கொழுந்துகள் உணவாகிறது. இதனைக்கண்டு தலைவி தலைவன் வராததை நினைத்து தோழியிடம் புலம்புகிறாள்.

**அன்பின் வெளிப்பாடு**

முல்லைத் திணையில் கார்ப்பருவம் வந்ததும் தலைவன் வராததால் துன்புறும் தலைவி அன்போடு கூடிவரும் விலங்குகளைக்கண்டு அவ்விலங்கினங்களுக்கு இருக்கும் அன்புகூட தலைவனுக்கு இல்லையே என்று புலம்புவதை

**தான் வந்தன்றே, தளிதரு தண்கார்**
**வாராது உறையுநர் வரல் நசைஇ**
**வருந்து நொந்து உறைய இருந்திரோ எனவே (குறுந்தொகை, பா. 12)**

என்று குறுந்தொகை உணர்த்துகின்றது. ஆண்மான் தன் துணையாகிய பெண்மானுடன் தெளிந்த நீரைக்குடித்து துள்ளி விளையாடியதைக் கண்டு தலைவி புலம்பிய நிலையின் வழி, தலைவன் மீது தலைவி கொண்ட பேரன்பை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நிகழ்ச்சியில் இயங்குதிணைக் கருப்பொருள்களும் தலைவி தலைவன் மீது கொண்ட பேரன்பும் இயைந்து பொருளுக்கும் உணர்ச்சிக்கும் உள்ள நெருக்கம் ஆழமானதாகவும் பிரிக்க முடியாததாகவும் காணப்படுகின்றது.

**மான்களின் மனை வாழ்வு**

முல்லை நிலத்தில் அமைதியாக வாழும் மானின் அன்பு நிலையை பல பாடல்களில் நாம் காணலாம்.குடும்பத்தலைவனாகிய ஆண்மான் அறுகம்புல்லின் மெல்லிய கொத்துகளைப் பெண்மானுக்குக் காட்டி உண்ணச்செய்வதும், மணல்கரையில் அதை உறங்கச் செய்து தான் காவல் காப்பதும் அன்பான வாழ்க்கைக்குரிய கடமைகளாக உள்ளன. இக்காட்சி,

**மறியாடு மருங்கின் மடப்பிணை அருத்தித்**
**தெள்ளறல் தழீஇய வார் மணல் அடைகரை**
**மெல்லியகிடு கவுள துஞ்சு புறம் காக்கும் (அகநானூறு, பா. 34)**

என்ற பாடலடி வழி வெளிப்படுகிறது. இங்கு தனது மனைவி, பிள்ளையைத் தூங்கச் செய்து காவல் காக்கும் ஆண்மகனின் பண்பை ஆண்மான் வழி காண முடிகிறது.

**புலிகளின் அன்பு வாழ்வு**

பெண்புலி கருவுற்று இரண்டு உயிர் உடையதாய் இருக்கிறது. அதன் பசியைப் போக்க ஆண்புலி வெளியே சென்று பெரிய யானையைத் தாக்கிக் கொல்கிறது. அப்போது பாம்பு தன்

மலர் - 4, இதழ் - 2, வைகாசி 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

மணியை உமிழ்ந்து விட்டு இரை தேடுகின்றது. அந்த மணியின் ஒளியே இருண்ட மலை வழியை விளக்கிக் காட்டுகிறது. இதை,

**ஈருயிர்ப் பிணவின் வயவுப் பசிகளைஇய**
**இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை**
**நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த**
**மேய் மணி விளக்கின் புலர ஈர்க்கும் (அகநானூறு, பா. 72)**

என்ற அடிகளின் வழி உணர முடிகின்றது.இங்கு தன் துணைக்காக இரை தேடும் ஆண்புலியின் அன்பு பதிவு செய்யப்படுகிறது.

**யானை**

தாயன்பில் சிறந்த பசுவைப்போல காதலன்பில் சிறந்தது களிறும் பிடியுமாகும். மழை தவழும் உச்சியை உடைய மலையில் வாழும் பெண்யானை கன்று ஈன்று மூங்கிலை உண்கின்றது. அன்பு கொண்ட ஆண்யானை அதன் உடம்பைத் தடவிக்கொண்டு நிற்க அது வாழைமரங்கள் வளர்ந்த மலைப்பகுதியில் உறங்குகின்றது. இதை,

**மழைதவழ் சிலம்பிற் கடுஞ்சூல் ஈன்று**
**கழைதின் யாக்கை விழைகளிறு தைவர**
**வாழையஞ் சிலம்பிற் றுஞ்சும்**
**சாரல் நாடன் சாயல் மார்பே! (அகநானுறு, நித்திலக்கோவை, பா. 328)**

என்ற பாடலடிகள் மூலம் நாம் அறிய முடிகிறது. இங்கே கன்றும், தாயும், தந்தையுமாக உள்ள யானைக்குடும்பம் ஒன்று மனிதக்குடும்பமாகவே நம் கண்ணுக்குப் புலனாகின்றது.

**பன்றிகளின் நல்வாழ்க்கை**

ஒரு காட்டுப்பன்றி தன் துணையோடும், குட்டிகளோடும், இனத்தோடும் காட்டில் திரிந்து கொண்டிருக்கின்றது. வேடுவர்கள் அவற்றைக் கண்டதும் வேட்டை நாயை ஏவுகின்றனர். ஆண்பன்றி அந்த நாயைத் தாக்கி தன் குட்டிகள் சிதறுண்டுபோய் இரையாகதபடி தழுவிக் காத்துக் கொள்கிறது. வேட்டுவர் நெருங்கி வருவதைக் கண்டு அவர்களையும் தடுத்து தன் துணையானப் பெண் பன்றி இனத்தோடு அங்கிருந்து தப்பித்துப் போகுமாறு செய்கிறது. பின் வேட்டுவர்களை எதிர்பார்த்து காத்திருக்கிறது. வேட்டைக்கு வந்த தலைவன் அதன் அஞ்சாமையையும், வீரத்தையும், அன்பையும் தன் சுற்றத்தைக் காக்கும் தன்மையையும் கண்டு வியக்கின்றான். அவன் அம்பு எய்யாமலேயே திரும்பும் நிலையை,

**தறுகட் பன்றி நோக்கி, கானவன்**
**குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி, (அகநானூறு, மணிமிடைபவளம், பா. 248)**

என்பதன் வாயிலாக அறிய முடிகின்றது.

**பசு**

விலங்குகளுள் தனிச்சிறப்புடையது பல நூறு ஆண்டுகளாக மனித வாழ்க்கையோடு

ஒன்றிணைந்து வாழ்வது. முல்லைப்பாட்டில் நப்பூதனார் தாயைப் பிரிந்த இளங்கன்றின் பிரிவுத்துயரத்தைத் தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்ப நிலையை உணர்த்துதல் பொருட்டு தன் படைப்பில் கையாண்டுள்ளார். இதனை,

**சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
**உறு துயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்**
**நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய**
**கொடுங்கோல் கோவலர் பின் நின்று உய்த்தர (நெடுநல்வாடை, பா. 12-15)**

என்ற என்ற வரிகளில் உணர்ந்து கொள்ள முடிகிறது. நக்கீரரோ நெடுநல்வாடையில் அதே பொருளில் உணர்த்தாமல் பசுக்கள் தம்மிடம் கன்றுகள் பாலுண்ணலைத் தவிர்க்க தம் காலால் எற்றி உதைத்தன என்பதை,

**மா மேயல் மறப்ப, மந்தி கூர,**
**பறவை படிவன வீழக் கறவை**
**கன்று கோள் ஒழியக் கடிய வீசி,**
**குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள் (நெடுநல்வாடை, பா. 9-12)**

என்ற வரிகளின் மூலம் கூதிர் காலத்தில் பசுக்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதைப் புலப்படுத்துகிறார்.

**பறவைகள்**

அன்பிற்கு எடுத்துக்காட்டாகப் புறாக்களைக் குறிப்பிடுவது காலங்காலமாக வழக்கிலிருந்து வரும் ஒன்றாகும். இப்புறாக்களைக்குறித்துக் கூறும்பொழுது உணவினால் பெறும் இன்பத்தை அவை விரும்பவில்லை. அதைப்போல இரைதேடி உண்பதைக்காட்டிலும் உடனுறையும் இன்பத்தையே பெரிதாக எண்ணின என்பதை நெடுநல்வாடையில் நக்கீரர்,

**மனையுறைப் புறவின் செங்கோல் சேவல்**
**இன்புறு பெடையொடு மன்றுதேர்ந்து உண்ணாது**
**இரவும் பகலும் மயங்கிக் கையற்று (நெடுநல்வாடை, பா. 45-47)**

என்ற வரிகளில் புறாக்களின் செயலற்ற நிலையைச்சுட்டுகிறார்.

**மீனுண்ணும் கொக்குகள் நாரைகள்**

கயல்மீன்கள் புதுப்புனலில் எதிர் ஏறிச் செல்கின்றன. பசிய கால்களையும் மெல்லிய சிறகினையுமுடைய கொக்குக் கூட்டமும் சிவந்த வரிகளையுடைய நாரைகளும் கரிய நிறமுள்ள சேறுபரந்த ஈரமான வெண்மணற் பரப்பிலே நின்று மீன்களைக் கவர்ந்து உண்ணுகின்றன.

**பைங்கால் கொக்கின் மென்பறைத் தொகுதி**
**இருங்களி பரந்த ஈர வெண்மணல்**
**செவ்வரி நாரையொடு எவ்வாயும் கவர**
**கயல்அறல் எதிரக் கடும்புனல் சாஅய் (நெடுநல்வாடை, பா. 15-18))**

என்ற நெடுநல்வாடையின் பாடலடிகள் மூலம் கொக்குகளையும் நாரைகளையும் நக்கீரர் கூறியமையை அறிய முடிகின்றது.

**நிறைவுரை**

இவ்வாறு சங்க இலக்கியங்களில் புலவர்கள் மக்களின் வாழ்வியலைப் பிற உயிரினங்களின் செயல்பாடுகளோடு ஒப்பிட்டுக் கூறுகின்றனர். இன்று திருமணம் எப்போது விவாகரத்து என்ற நிலையில் இன்றைய சமுதாயம் சென்று கொண்டிருக்கின்றது. ஆண், பெண் சேர்ந்து வாழும் இல்லற வாழ்வு என்னும் நிலையே இல்லாமல் போகலாம். காட்டில் வாழும் விலங்கினமே தன் இணையிடம் மிகுந்த அன்பு செலுத்தி நல்குடும்பமாய் வாழும் காட்சியைப் பார்க்குமிடத்து, மனிதர்களாகிய நாம் எந்த அளவு அன்புடன் வாழ்ந்து இல்லறவாழ்வு வாழ வேண்டும் என்பதை முன்னோர்கள் இலக்கியங்கள் வாயிலாகக் கூறிச்சென்றுள்ளமை நமக்கெல்லாம் ஒரு பாடமே.

**குறிப்புகள்**

[1] இரா. அச்சுதன். *குறுந்தொகை காட்டும் வாழ்வியல்*. கௌரா பதிப்பகம், சென்னை, 2022.

[2] மகாதேவன், கதிர். முனைவர். *நற்றிணை*. கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.

[3] இளம்பூரணர். *தொல்காப்பியம்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

[4] *நச்சினார்க்கினியர். நெடுநல்வாடை*. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், மதுரை, 1989.

[5] மோகன், இரா. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 600098, 2017.

[6] புலியூர்கேசிகன். *குறுந்தொகை மூலமும் உரையும்*. சரண் பதிப்பகம், சென்னை, 2021.

[7] ந. மு. வேங்கடசாமி நாட்டார். *அகநானூறு மூலமும் உரையும்*. கழக வெளியீடு, 1968.

[8] ச. ஜெகத்ரட்சகன். *குறுந்தொகை*. திருமகள் பதிப்பகம், சென்னை, 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.